பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆடி 1௳ (17—7—67) திங்கள் ★ வெளியூர்: ஆடி 2௳ (18—7—67) செவ்வாய் [இதழ்: 28

தமிழக அரசின் கோரிக்கை-- டில்லியின் அலட்சியம்

அமைச்சர் கே. ஏ. மதியழகன் குற்றச்சாட்டு

கோதுமை ஒதுக்குவதில் பாராமுகம் -- உறுப்பினர்கள் குமுறல்

சென்னை, சூலை 17—

தமிழகத்திற்கு மத்திய அரசு ஒதுக்கும் கோதுமையின் அளவு ஐந்தில் ஒரு பங்காகத் தற்போது குறைக்கப்பட்டிருக்கிறது என்றும், கோதுமை அளவைக் கூட்டித் தருமாறு பல முறை வற்புறுத்தியும் இதுபற்றி அக்கறை செலுத்தாமல், கிழக்கு உத்தரப் பிரதேசத்தையும், பீகாரையும், சூயஸ்கால்வாயையும்தான் மத்திய அரசு பார்த்துக் கொண்டிருக்கிறது என்றும், உணவு அமைச்சர் திரு. கே.ஏ. மதியழகன், இன்று சட்டமன்றத்தில் குற்றஞ்சாட்டினர்.

கேள்வி:—"கோதுமை சாப்பிடுமாறு தமிழ்நாட்டு மக்களிடை பிரசாரம் செய்துவந்திருப்பதாலும், இங்கே அரிசி பற்றுக் குறையாக இருப்பதாலும், இந்த நிலைமையை மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி அதிகக் கோதுமை கொடுக்கும்படிக் கேட்க இந்த அரசுமுன்வருமா?"

பதில்:—"சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் எடுத்துச் சொல்லிவருகிறோம்; ஆனால் அவர்கள், கிழக்கு உ. பி. மாநிலத்திலும், பீகாரிலும், சூயசிலும் தான் கவனத்தைச் செலுத்தி வருகிறார்கள்."

கே. விநயகம்:—"ஆண்டுக்கு ஆண்டு கோதுமையைக் குறைத்துக்கொண்டு வருவதாலும், அரிசி பற்றுக்குறையாக இருப்பதாலும், கலப்பு உணவைப் பெறமுடியாததாலும், அரைப்பட்டினி — கால்பட்டினியுடன் இந்த மாநிலத்து மக்கள் செத்து மடிந்துகொண்டிருக்க வேண்டியதுதானா?"

அமைச்சர்:—"இதே உணர்வுடன்தான் இந்த அரசு மத்திய அரசைக் கேட்டு வற்புறுத்திவருகிறது. நம்மைப் பார்த்து கேரளத்துக்குஅரிசி அனுப்பச்சொல்கிறார்கள். இதையெல்லாம் சுட்டிக்காட்டி, கோதுமை அனுப்பும்படி கேட்டிருப்பதுடன், உ. பி. மாநிலத்திலிருந்து பருப்பு வகைகள்கூட வாங்கியனுப்புமாறு கோரிவருகிறோம்."

வி. கே. கோதண்டராமன்:— "நமக்குப் போதிய கோதுமையும் கொடுக்காமல், அரிசி விலையைக் குறைத்துக் கொடுக்கத் தேவையான பணவுதவியும் அளிக்காமல் இருக்கும் மத்திய அரசினால்தான், அரைப் பட்டினி—கால் பட்டினியாக மக்கள் அவதிப்படுகிறார்கள் என்பதை இந்த அரசு உணருகிறதா?"

பதில்:—"மத்திய அரசிடம் வற்புறுத்துவதில், உறுப்பினர்கள் தங்களின் உணர்வுபூர்வமான ஒத்துழைப்பை இந்த அரசுக்குத் தரவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்."

கேள்வி:—"கோதுமை அளவை ஐந்தில் ஒரு பங்காகக் குறைத்ததற்கு, அரசியல் கண்ணோட்டம் தான் காரணமா? மாற்றுக் கட்சி ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டதுதான் காரணமா?

பதில்:—"அப்படி உள்நோக்கம் எதுவும் கற்பிப்பது சரியாக இருக்காது என்று கருதுகிறேன். இப்போது, மத்திய அரசின் கவனமெல்லாம் உ. பி.-யிலும் பீகாரிலும், சூய்சிலும் எகிப்திலும்தான் இருக்கிறது."

கே. பி. எஸ். மணி:—"நமக்கே பற்றுக்குறை நிலை இருக்கும்போது, மற்ற மாநிலங்களுக்கு அரிசி கொடுக்குமாறு மத்திய அரசு, மேலே இருந்துகொண்டு விரட்டிக்கொண்டிருக்கிற இந்த நிலைமையில், பர்மாவிலிருந்து நாமே நேரடியாகவோ, தனிப்பட்ட வியாபாரிகள் மூலமோ அரிசி தருவிக்க இந்த அரசு முயற்சி செய்யுமா?"

பதில்:—"பர்மாவிலிருந்து அரிசி தருவிப்பது பற்றி ஏற்கனவே இந்த அரசு மத்திய அரசுக்கு யோசனை தெரிவித்திருக்கிறது."

பெரியார் -- அண்ணா சந்திப்பு

உடல்நலம் பற்றி விசாரித்தார்

திருச்சி, சூலை 16—

அறிஞர் அண்ணா அவர்களும் அமைச்சர் சத்தியவாணி முத்து அவர்களும், உடல் நலமின்றி இருக்கும் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களை, திருச்சி—புத்தூரிலிருக்கும் அவரது வீட்டிற்குச் சென்று பார்த்தனர்.

பெரியார் அவர்களின் உடல் நிலையைப் பொறுத்து, அவரைப் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதைக் கூடுமானவரை குறைத்துக்கொள்ளுமாறு அறிஞர் அண்ணா அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

பெரியார் அவர்களால் ஓர் இலட்ச ரூபாய் நிதி கொடுக்கப்பட்டு, அரசு மருத்துவமனையில் குழந்தைகளுக்கான சிகிச்சைப்பகுதி கட்டப்படவிருக்கும் இடத்தைத் தாம் பார்வையிட்டதாக, பெரியாரிடம் அண்ணா அவர்கள் கூறினார்கள்.

புதிய மாணவர்களைத் துன்புறுத்தும் செயல்

ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவு

சென்னை, சூலை 16—

புதிய மாணவர்களைக் கேலி செய்து துன்புறுத்துவது போன்ற 'காட்டுமிராண்டித்தன'மான நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்கள்மீது மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமாறு பொறியியற் கல்லூரிகள்—தொழிற் கல்லூரிகளின் தலைவர்களுக்கு அரசு உத்தரட்டுள்ளது.

புதிய மாணவர்களைத் துன்புறுத்தும் செயலில் ஈடுபடும் மாணவர்கள் பிடிபட்டால் அவர்களை உடனடியாக நீக்கிவைத்து, பல்கலைக் கழகத்திற்கும், கல்வி இயக்குநருக்கும் செய்தி அறிவிக்கும்படி அரசு கூறியுள்ளது.

உறுதியுடன் நடவடிக்கை எடுத்து, புதிய மாணவர்களைத் துன்புறுத்தும் இதுபோன்ற செயல் தடுக்கப்படவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி கல்லூரிகளுக்குப் பல்கலைக் கழகம் கடிதம் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

அறிஞர் அண்ணா

பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்துவார்

சென்னை சூலை 17—

மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா செப்டம்பர் 7-ஆம் நாள் நடைபெறும்.

தமிழகக் கவர்னர் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில், முதலமைச்சர் அண்ணா அவர்கள் முதன் முறையாகப் பட்டமளிப்பு விழா உரையினை நிகழ்த்துவார்கள்.

தீ விபத்து நிவாரணம்

எம். ஜி. ஆர்.

வசூலித்த இரண்டு நாள் நிதி

சென்னை, சூலை 16—

"சென்னை நகரில் ஏற்பட்ட தொடர் தீ விபத்து நிவாரண நிதிக்காக புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., கடந்த இரண்டு நாட்களாக வட சென்னையில் பொதுமக்களிடம் திரட்டிய நிதி ரூ. 25,662.18"

என்று மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் அறிவித்தார்.

முதல் நாள் ரூ. 7964-ம், இரண்டாம் நாள் ரூ. 17,698.18-ம் வசூலாகியிருக்கிறது.

"எம். ஜி. ஆர். அவர்களிடம் இரண்டு நாட்களிலும் நிதியுதவிக்காக பொருள்களாக அளிக்கப்பட்ட சேலை, வேட்டி, துண்டு, கைலி, மற்றும் பாத்திரங்களின் மதிப்பு ரூ. 10 ஆயிரம் இருக்கும்.

"இந்த நிதி நிகழ்ச்சியில் இதுவரை இரண்டு நாட்கள் வட சென்னைப் பகுதியில் எம். ஜி. ஆர். கலந்துகொண்டார்; இன்னும் மூன்று நாட்கள் இப்பகுதியில் எம். ஜி. ஆர். நிதி திரட்டுவார்; பின், தென் சென்னையில் 5 நாட்கள் நிதி திரட்டுவார்"

என்றும் மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் கூறினார்.

ஆபாச விளம்பரங்கள்

ஒழிப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிய குழு அமைப்பு

திருச்சி, சூலை 16—

"ஆபாசம் என்றால் என்ன என்பதை வகைப்படுத்தவும், அத்தகைய ஆபாச விளம்பரத் தட்டிகள் வைப்பதை அடியோடு ஒழிப்பதற்கான வழிமுறையைக் கண்டறியவும் தமிழக அரசு விரைவில் ஒரு குழுவை அமைக்கும்; அக்குழுவில், சென்னை நகர காவல் துறை தலைமை அதிகாரி, படத் தயாரிப்பாளர்கள், சமூக நிலையங்களின் தலைவர்கள் ஆகியோர் இடம் பெறுவர்"

என்று அமைச்சர் சத்தியவாணி முத்து செய்தியாளர்களிடம் கூறினார்.

புதிய உருக்காலை கிடையாதாம்!

மொரார்ஜி தேசாய் கைவிரிப்பு

'பொகாரோ' திட்டத்தை விரிவாக்குவதிலேயே டில்லியின் அக்கறை!

விஜயவாடா, சூலை 16—

"புதிதாக இரும்பு உருக்காலை நிறுவும் எண்ணம் மத்திய அரசுக்கு இல்லை" என்று துணை முதலமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சேலம்—தூத்துக்குடித் திட்டங்களை வற்புறுத்தும் வகையில் தமிழகத்தில் எழுச்சி நாள் கொண்டாட இருக்கும் இந்நேரம் பார்த்து, அண்டை மாநிலமான ஆந்திரத்திலிருந்தபடி இந்த அறிவிப்பைச் செய்திருக்கிறார் மொரார்ஜி தேசாய்!

"விசாகப்பட்டினத்தில் ஐந்தாவது உருக்காலையை அமைக்க வேண்டும்" என்று வற்புறுத்திவரும் ஆந்திரர்கட்குப் பதிலளிக்கும் வகையில் இதனைத் தெரிவித்திருந்த போதிலும், 'சேலம் உருக்காலைத் திட்டத்துக்கும் இதே பதில்தான்' என்ற தோரணையிலேயே அவர் அறிவிப்பு அமைந்திருக்கிறது.

"புதிய உருக்காலை எதுவும் நிறுவும் உணர்வுக்கு மாநிலங்கள் இடம் கொடுக்கக்கூடாது" என்று குறிப்பிட்டார் அவர்.

உருக்காலை ஏற்படுத்தும் அளவுக்குத் தற்போது மத்திய அரசிடம் பண வசதி இல்லை என்றும், பணம் இருந்திருக்குமானால், பொகாரோ உருக்கு ஆலையை விரிவுபடுத்தும் வேலை மேற்கொள்ளப் பட்டிருக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

எதற்கெடுத்தாலும் மத்திய அரசைப் பழிசுமத்திப் பலியாடாக்க முனையக்கூடாது என்றும், நிர்வாகம் சுமுகமாக நடைபெறும் வகையில் தத்தம் சொந்த வேலைகளிலேயே கவனம் செலுத்த வேண்டும் என்றும் காங்கிரசல்லாத மாநில அரசுகட்கு அறிவுரை வேறு வழங்கியிருக்கிறார் மொரார்ஜி!

பொறுப்பற்ற பதில்

விசாகையில் ஐந்தாவது உருக்காலை அமைக்கக் கோரி, வருகிற 20-ந்தேதி தீக்குளிக்கப்போவதாக அமிர்த ராவ் என்பவர் அறிவித்திருப்பது குறித்து மொரார்ஜியிடம் செய்தியாளர்கள் கேட்டதற்கு,

"சாகவேண்டாம் என்று அவரிடம் அன்புகூர்ந்து சொல்லுங்கள்"

என்று பதிலளித்தார்.

'அறிவுரை'யா? அச்சுறுத்தலா?

நாகார்சுனசாகர் அணையிலிருந்து 20 மைல் தொலைவில், ரூ. 1.45 கோடி செலவில் கட்டப்பட்ட புக்காவாரு அணையைத் திறந்துவைத்து திரு. மொரார்ஜி தேசாய் பேசுகையில், எதிர்க் கட்சிகள், காங்கிரசுக் கட்சியை குறை கூறிக்கொண்டே இருப்பதாகவும், சில மாநிலங்களில் எதிர்க் கட்சிகள் ஆட்சிக்கு வந்திருப்பதால், 'ஆட்சி நடத்துவது எப்படி' என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் அறிவுரை பகன்றிருக்கிறார்.

"அவர்கள் மேலான காரியங்களைச் செய்வார்கள் என உறுதியாக நம்புகிறோம்; எங்களைவிட அவர்கள் நல்ல முறையில் ஆளுவார்களானால், அவர்களிடமிருந்து நாங்கள் பாடம் கற்றுக்கொள்ள விருப்பமுடையவர்களாகவே இருக்கிறோம்" என்றார் அவர்.

நம் நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.
திருவள்ளுவராண்டு 1998 ஆடி 1 (17—7—67) திங்கள்

அரசியல் விந்தை!

"இந்தியாவின் பல்வேறு பகுதியினரும் தி. மு. கழகத்தைப் பற்றி இதழ்மூலம்—பேச்சுமூலம் பாராட்டுகிறார்கள். 'தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தால் ஒருவருக்கு ஒருவர் பகை மூளும்' என்று வடக்கே உள்ளவர்கள் நினைத்தார்கள்.

"நாம் ஆட்சிக்கு வந்தபிறகு, நாம் எடுத்துச் சொல்லியவைகளைக் கேட்டுவிட்டு. 'இப்படியா இருக்கிறீர்கள்—தெரியாதே! தெரியாதே!' என்று சொல்லுகிறார்கள்.

"நம்மைப்பற்றி இருந்த ஐயம், ஐயப்பாடு பெரும் அளவிற்கு நீங்கிவிட்டது. தி. மு. கழகத்தைப்பற்றி—தி. மு. கழக ஆட்சியைப்பற்றி நல்ல எண்ணத்துடன் பாராட்டுகிறார்கள்; ஒத்துழைப்புத் தருகிறார்கள்.

"நெடுந் தொலைவில் உள்ளவர்கள் இப்படி நல்ல எண்ணத்துடன் நடந்துகொள்ளுகிறார்கள்; ஆனால், பக்கத்திலுள்ளவர்கள் நல்ல எண்ணத்துடன் இல்லை. அரசியலில் இது ஓர் விந்தை!

"வடக்கே உள்ளவர்கள் பாராட்டுகிறார்கள்; ஆனால் இங்கே உள்ளவர்கள் அருவருப்புக் கொள்ளுகிறார்கள். சந்தேகப்படும் அளவிற்கு அவர்களின் எண்ணங்களும் அரசியல் நடவடிக்கைகளும் கேடுபாடுகளை உண்டாக்குகின்றன; இது வருந்தத்தக்கது."

தி.மு. கழகத்தையும், கழக ஆட்சியையும்பற்றி வடக்கே இருக்கின்றவர்கள் நல்லெண்ணத்துடன் பாராட்டுகின்ற நேரத்தில், தமிழகத்திலுள்ளவர்கள் அருவருப்படைகின்றனர் என்ற உண்மையை, முதலமைச்சர் அண்ணா அவர்கள், தலைப்பில் எடுத்துக் காட்டியுள்ளபடி விளக்கமாகக் கூறியிருக்கின்றார். இதை, 'அரசியலில் ஓர் விந்தை' என அவர் கருத்தறிவித்திருக்கின்றார்.

இக்கருத்தை வெளியிட்டிருக்கின்ற நேரத்தில்,

"தீ வைத்தவன் அவனாக இருக்குமோ—இவனாக இருக்குமோ—என்று யாரையும் தாக்காதீர்கள்; அப்படி நீங்கள் யாரையாவது அடித்தால் உங்களை அறியாமலே அந்த அடி என்மீது விழுந்ததாக வருந்துவேன்"

எனக் கூறியிருப்பதன்மூலம், 'வன்முறைச் செயல்களில் எவரும் ஈடுபடக்கூடாது' என வலியுறுத்திக் கூறியிருக்கின்றார் முதலமைச்சர் அண்ணா.

இதுவுமன்றி, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த ஒரு முக்கியஸ்தர், சில கயவர்களால் தாக்கப்பட்டதைக் கேட்டுத் தமக்கு ஏற்பட்ட நெஞ்சக் குமுறலை சட்டமன்றத்தில் எடுத்துக் கூறி, வருத்தமும் தெரிவித்திருக்கின்றார் அண்ணா அவர்கள்.

பின்னர் குறிப்பிட்டிருக்கின்ற இரண்டு கருத்துக்களும், வன்முறைச் செயல்களை முதலமைச்சர் அண்ணா அவர்கள் எந்த அளவுக்கு வெறுக்கின்றார் என்பதை மெய்ப்பிக்கப் போதிய சான்றுகளாகும்.

இந்த நிலையில், பொதுத்தேர்தல் முடிவு தெரிந்த நாள் தொட்டு இன்றுவரை வெளிப்படையாக வாய்திறவாதிருந்த அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவர் காமராசர், இரண்டு நாட்களுக்குமுன் வாய்திறந்திருக்கின்றார். வாய் திறந்ததும், அவர் என்ன செய்திருக்கவேண்டும்—குடிசைகளுக்குத் திட்டமிட்டுக் கொள்ளிவைத்து வருகின்ற கயவர்களைக் கண்டித்திருக்க வேண்டும்: 'அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவர்' என்ற முறையில் அவர், அதைத்தான் முதற்கண் செய்திருக்க வேண்டும். அவ்வளவு பெரிய பதவியிலிருப்பவருக்கு அவ்வாறு கண்டிப்பதுதான் அழகாகும்.

ஆனால் அந்தக் கனவானோ, அதுபற்றி வாய் திறக்கவேயில்லை! எடுத்த எடுப்பிலேயே, கழக ஆட்சியைத் தாக்கத் துவங்கிவிட்டிருக்கின்றார்.

தீ விபத்துக்களைக் காரணமாகக் காட்டி, நகரம் முழுதும் காங்கிரசுக்காரர்களும் அனுதாபிகளும் நாள் தவறாமல் தாக்கப்பட்டு வருவதுபோலவும், காவல்துறையினர் இத்தாக்குதலைக் கண்டும் காணாதவர்கள்போல் அலட்சியமாக இருந்துவருவது போலவும் கற்பனை செய்துகொண்டு, கழக ஆட்சிமீது பழிசுமத்தும் பணியை மேற்கொண்டிருக்கின்றார், காமராசர்!

"சம்பவங்களையொட்டி காங்கிரசுத் தொண்டர்களும் அனுதாபிகளும் தாக்கப்படுவதாகவும் கொடுமைப்படுத்தப்படுவதாகவும் கூறினீர்கள்.

"இம்மாதிரிச் சம்பவங்களால் ஆத்திரம் ஏற்படத்தான் செய்யும்—கோபம் வரும்; ஆனால், துன்பங்களையும் துயரங்களையும் தாங்கிப் பழக்கப்பட்டவர்கள் நாம்; நமக்கு என்ன கஷ்டம் வந்தாலும் பொறுத்துக்கொள்ள வேண்டும். மற்றவர்கள் நம்மீது பழியைச் சுமத்துவதால் நாமும் அப்படி செய்வது சரியல்ல.

"காங்கிரசுக்காரர்கள் அடிக்கப்படுகின்றனர்; துன்புறுத்தப்படுகின்றனர்; இதெல்லாம் எனக்குத் தெரியாதென்று நினைக்கின்றீர்கள்? அவர்கள் என்ன தவறு செய்தார்கள்? காங்கிரசுக்காரர்கள் கதர் அணிந்தவர்கள் என்ற பாவத்தைத் தவிர வேறு என்ன தவறு செய்தார்கள்? அவர்கள் தாக்கப்பட்டு வேதனைப்படுகின்றனர். அவர்கள் படும் வேதனையைவிட நான் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றேன்."

இதுதான், அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவர் காமராசர் அவர்களின் முடிவு-கழக ஆட்சிக்கு மாசு ஏற்படுத்த, காமராசர் தீட்டியிருக்கின்ற அரசியல் திட்டத்துக்கு இது ஒரு முன் மாதிரி—முன்னோடி!

"தீ விபத்துக்களைத் தொடர்ந்து காங்கிரசுத் தொண்டர்கள் தாக்கப்பட்டதையெல்லாம் தொகுத்துப் புத்தகமாக வெளியிட்டு மக்களுக்குக் கொடுக்கலாம்" என்ற அரிய யோசனையையும் அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவர் கூறியிருக்கின்றார். மனித கற்பனைக்கு எட்டாத தாக்குதல் கதைகள் எல்லாம், அவ்வேட்டில் இடம் பெற்றிருக்கும்.

முன்னாள் முதலமைச்சர் பெருந்தகை இருக்கின்றாரே பக்தவத்சலனார்—அவரோ, கழகத்தின்மீதும், ஆட்சியின்மீதும் பழி சுமத்துவதில், அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவரையும் மிஞ்சிவிட்டார்! அவர் கூறியுள்ளார்—'நகரத்தின் பல பகுதிகளிலும் போக்கிரிகள், கார்களை நிறுத்தி, உள்ளிருப்பவர்களிடம் பணம் பெறுகின்றனர்' எனக் கதையளந்திருப்பதுடன், 'இக்கற்பனை நிகழ்ச்சிகள், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது நடைபெற்ற நிகழ்ச்சிகளை எனக்கு நினைவுபடுத்துகின்றன' எனவும் சரடு திரித்திருக்கின்றார்!

காமராசர் கோரியுள்ளபடி, 'இந்தக் கார் வழிமறிப்புகளும்' நூல் வடிவம் பெறக்கூடும்!

காங்கிரசுக் கட்சியினரும் அனுதாபிகளும் தாக்கப்படுவது உண்மையானால், அந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் முதலமைச்சரிடம் எழுத்துமூலம் தெரிவிக்கவேண்டியதுதான், அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவரின் கடமையாகும். எப்படியாவது கழக ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்தவேண்டும் எனத் திட்டமிட்டிருந்தால் அல்லாது, தாம் கூறியிருக்கின்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகளை முதலமைச்சரின் பார்வைக்குக் கொண்டுவருவதை, காமராசர் தவிர்க்கத் தேவையில்லை.

காங்கிரசுக்காரர்கள் தாக்கப்படுகின்றனர்—கொடுமைப்படுத்தப்படுகின்றனர்' என்ற தமது கூற்றில் உண்மையிருந்தால் அல்லவா, அச்சம்பவங்களை முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவர, காமராசரால் துணியமுடியும்? அரசியல் காரணத்துக்காகக் கற்பனையாகக் கூறப்படுகின்ற நிகழ்ச்சிகளுக்கு நியாயம் கோரி முதலமைச்சரை நாடுவது எப்படி? அப்படி நாடுவதற்கு காமராசர் என்ன—அரசியல் அப்பாவியா?

'எவரெவருடைய கார் எங்கெங்கு பாதிக்கப்பட்டது? அவ்வாறு பாதிக்கப்பட்ட கார்களிலிருந்தவர்கள் எவரெவர்? அவர்களை அச்சுறுத்திக் கேட்டவர்களிடம் அவர்கள் கொடுதத பணம் எவ்வளவு? வழிமறித்துப் பணம் பறித்தவர்கள் யார், யார்?' என்பதையெல்லாம் தெளிவாகவும், விரிவாகவும் கூறியிருக்க வேண்டும்—பக்தவத்சலனார்! 'பொதுப்படையாகக் கூறினால் போதாது; குறிப்பிட்டுக் கூறினால் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயங்காது' என்ற பதிலை—தாம் முதலமைச்சராக இருந்த நேரத்தில்—எடுத்ததற்கெல்லாம் கூறிக் கூறி நல்ல பயிற்சிபெற்றிருக்கின்ற பக்தவத்சலனாருக்குத் தெரியாதா—'கூறுகின்ற குற்றச்சாட்டு பொதுப்படையாக இருக்கக் கூடாது; குறிப்பாக இருந்திடவேண்டும்' என்ற உண்மை?

எதையாவது கூறி, கழக ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டும் எனத் தீர்மானித்திருக்கக்கூடிய முதல்தரமான அரசியல் சதிகாரரான பக்தவத்சலனார் உள்ளத்தை, உண்மை எங்காவது உறைவிடமாக்க் கொள்ளுமா? இச்செயலைத்தான், 'அரசியல் விந்தை' எனக் கொள்ளவேண்டும்.

—கா. க.

உள்ளாட்சி மன்றங்களுக்குப் புதுப் பொலிவூட்டும் நடவடிக்கை

காங்கிரசு ஆட்சி கைவிட்ட முயற்சியைக் கழக ஆட்சி மேற்கொள்கிறது

'47 ஆண்டுக் காலச் சட்டம் திருத்தியமைக்கப்படும்' -- சட்டமன்றத்தில் அமைச்சர் முத்துசாமி அறிவிப்பு -- கொள்கை விளக்கம்

தமிழகச் சட்டமன்றததில், கதர்—சமுதாய நல வளர்ச்சித் திட்டம்—பொதுப் பணி வளர்ச்சித் திட்டம் ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகள்மீது 13-7-67 அன்று நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கும்வகையில், உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி அவர்கள் ஆற்றிய உரையின் முழு விவரம் இங்கு தரப்படுகிறது :—

"விவாதத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் அத்தனைபேரும், 'இந்த ஊராட்சிமன்றங்கள்—ஊராட்சி ஒன்றியங்கள் — நகராட்சிமன்றங்கள்— நாட்டினுடைய பேராட்சிமன்றத்திற்கு அடிப்படைத் தளங்களாக — கேந்திர மையங்களாக விளங்குகின்றவை' என்ற கருத்தை மனப்பூர்வமாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சமுதாய வளர்ச்சித் திட்டத்தை—கிராம இராஜ்யத் திட்டத்தை, 'நாட்டிலே பரவலாக உருவாக்க வேண்டும்' என்ற பேரெண்ணத்தை வெளியிட்டவர் உலக உத்தமர் காந்தியார் ஆவார்.

காந்தியார் அந்தத் திட்டத்தை வெளியிட்டாலும், 'அந்தத் திட்டத்தை நாட்டிலே நடைமுறைப் படுத்த வேண்டும்' என்று பெரு விருப்பம் காட்டியவர், மறைந்த தலைமையமைச்சர் பண்டித ஜவகர்லால் நேரு ஆவார்கள்.

ஆகவே, கதர்த் திட்டத்தினுடைய மிகப் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காந்தியாரும், சமுதாய வளர்ச்சித் திடடத்தினுடைய பொறுப்பை ஏற்றுக் கொண்ட நேரு அவர்களும் கொண்டுவந்த இந்தத் திட்டத்தில், நமக்கெல்லாம் இருக்கும் அன்பைவிட— ஆர்வத்தைவிட, இதுவரையிலும் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்த அருமை நண்பர்களுக்கு அதிகமாக இருக்கும்.

அவர்கள், நீண்டகாலமாக இந்த நாட்டை ஆண்டு அனுபவப்பட்டவர்கள்; ஆகவே, அவர்களுடைய நல்ல ஆலோசனை இந்த நேரத்தில் நமக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தேன்.

ஆனால், என்ன காரணத்தினாலோ அவர்கள் — (இன்று காலையில் வெளிநடப்புச்செய்தனர்) போனவர்கள்—திரும்பி வரவே இல்லை.

"காந்தியாருக்கும் நேருவுக்கும் இந்தத் திட்டத்தின்மீது இருந்த நம்பிக்கை இவர்களுக்கெல்லாம் இல்லையோ" என்றுகூட ஐயப்பாடு ஏற்படுகிறது; என்றாலும் கூட, நாம் மனம் மகிழத்தக்க வகையில், நீண்டகாலமாக அவர்களோடு இருந்தவரும் அவர்களுக்கெல்லாம் வழிகாட்டியவருமான மதிப்பிற்குரிய ம. பொ. சி. அவர்கள் இங்கே இருந்து அருமையான கருத்துக்களை எடுத்துச் சொல்லி நமக்கு ஆதரவைக் காட்டியதற்காக நான் அவர்களுக்குப் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திறம்படச் செயலாற்ற இயலாததற்குக் காரணம்?

'ஊராட்சிமன்றங்கள்—ஊராட்சி ஒன்றியங்கள்—நகராட்சிமன்றங்கள் சீரிய முறையில் செயல்பட வேண்டும்; கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள் மேலும் பரவலாக்கப்பட வேண்டும்; கொடுக்கப்பட்டிருக்கின்ற நிதி வசதிகளை மேலும் பெருக்க வேண்டும்' என்கிற அடிப்படையில்தான் எல்லா உறுப்பினர்களுமே தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். 'அரசினுடைய கருத்தும் அதுவேதான்' என்று, இந்த மாமன்றத்துக்குக் கொடுத்த குறிப்பில் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருந்தேன்.

இந்த மன்றங்கள் சீராகச் செயல்படுவதற்கான பல்வேறு யோசனைகளை இங்கே சொன்னார்கள். அப்படிச் சொல்லப்பட்டவைகளிலே, 'இந்தச் சட்ட திட்டங்களையெல்லாம் முறைப்படித் திருத்தியமைத்து மேலும் வலிவுள்ளனவாக்க வேண்டும்' என்று சொன்னார்கள்.

நகராட்சிச் சட்டத்தைப் பொறுத்தவரையில், நீண்டகாலத்திற்கு முன்னாலே உருவாக்கப்பட்ட சட்டம் என்பதை கனம் உறுப்பினர்கள் அறிவார்கள்.

1920-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை வைத்துக் கொண்டு, ஏறக்குறைய 47, 48 ஆண்டுகளாக நாம், நம்முடைய நகராட்சியை நடத்தி வந்திருக்கிறோம். அதில் அவ்வப்போது சில பல மாற்றங்கள் செய்யப் பட்டனவே தவிர, காலத்திற்கு ஏற்றவகையிலே திருத்தியமைக்கப்படவில்லை.

முந்திய அரசாங்கத்தின் கடைசி நேரத்தில் அப்படிப்பட்ட முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டு, பிறகு என்ன காரணத்தாலோ விடுபட்டுப் போய்விட்டது.

ஆகவே, நீண்டகாலமாக ஏற்பட்டிருக்கக்கூடிய மாற்றங்களுக்கு ஏற்றவகையில் சட்டம் மாற்றியமைக்கப்படாததால், இன்றைக்குப் பல்வேறு நகராட்சிகளில், 'எந்தக் காரியமும் திறம்படச் செய்ய முடியவில்லை' என்ற குறைகளையும், குற்றங்களையும் எடுத்துச் சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது.

இந்த அரசு அந்தச் சட்டத்தை முறைப்படித் திருத்தி, இன்றைக்குள்ள நிலைமைக்கு ஏற்ற வகையில் செய்யவேண்டும் என்பதற்கான முயற்சியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

அதே நேரத்தில், இந்தச் சட்டத்தை உருவாக்கி இந்த மாமன்றத்திற்குக் கொண்டுவருவதற்கு முன்னால், இந்தத் துறையிலுள்ள நகராட்சிமன்றத் தலை

(4-ம் பக்கம் பார்க்க)

கல்லூரித் தேர்வுக் குழு அமைப்பின் நோக்கம்

அமைச்சர் நெடுஞ்செழியன் தரும் விளக்கம்

சென்னை, ஜூலை 14—

"அரசினர் கல்வி நிறுவனங்களில் சேரும் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான குழுவில் பின்னிலை வகுப்பைச் சேர்ந்த தகுதிவாய்ந்தவர்கட்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுமா?" என்று சட்டமன்றத்தில், திரு. கே. விநாயகம் கேட்ட கேள்விக்கு, கல்வி — தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"முந்திய அரசு, முந்திய ஆண்டுகளில் கையாண்ட கோட்பாடுகளைப் பின்பற்றியே இந்த அரசும் குழு அமைத்துள்ளது. இதில் சாதி அடிப்படை பார்க்கப்படவில்லை. மேலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 14 சதவிகித இடமும், மிகவும் பின்தங்கியவர்கள் உள்ளிட்ட பின்தங்கிய வகுப்பினருக்கு 25 சதவிகித இடமும் ஒதுக்கிவிட்டு மிச்ச இடத்துக்குத்தான் மற்றவர்களைச் சேர்க்கிறோம்."

கேள்வி;— "தனியார் துறைக் கல்லூரிகட்கும் இதைப்போன்ற குழு அமைக்கும் யோசனை உண்டா?"

பதில்:—"அரசினர் கலைக் கல்லூரிகளில்கூட எல்லாவற்றிற்கும் குழு அமைக்கவில்லை. 22 கல்லூரிகள் இருந்தபோதிலும், 9 கல்லூரிகட்குத்தான் குழு அமைக்கப்பட்டது. முந்திய அரசும் இதே 9 கல்லூரிகளுக்குத்தான் குழு அமைத்திருந்தது. ஏனைய கல்லூரிகளில் அந்தந்தக் கல்லூரி முதல்வர்களே கவனித்துக் கொள்கிறார்கள். கல்லூரி முதல்வருடன் முதுநிலைப் பேராசிரியர் ஒருவரும் இருப்பார். தனியார் கல்லூரிகளிலும் குழு அமைக்கும் யோசனை ஆராயப்படும்,"

ஈ. ஆர். கிருஷ்ணன்:—"தனியார் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களையும் கேட்பதில்லை; பொதுமக்களின் கருத்தும் கேட்கப்படுவதில்லை; எனவே, அடுத்த ஆண்டிலாவது ஒரு குழு அமைக்கப்படுமா?"

பதில்:—"பொதுவாகக் குழு அமைக்கும் கருத்தும் பரவலாக இருந்துவருகிறது. தக்க முறையில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும்."

எஸ். முருகையன்:—"சென்ற ஆண்டில், கல்லூரி மாணவர் தேர்வுக் குழுக்களில் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் எத்தனைப்பேர் இருந்தனர்?"

அமைச்சர்:—"சென்ற தடவை எதிர்க் கட்சியைச் சேர்ந்த யாரையும் குழுவில் நியமிக்கவில்லை."

து. ப. அழகமுத்து:—"முன்பு சட்டமன்றத்தில், எதிர்க் கட்சியினருக்கு ஏன் இடமளிக்கவில்லை என்று கேட்டபோது, அப்போது தொழிலமைச்சராக இருந்த திரு. வெங்கட்ராமன், 'இது அரசாங்கக் கொள்கை' என்று கூறியது இந்த அரசுக்குத் தெரியுமா?"

அமைச்சர்:—"அந்த அரசின் கொள்கை எதுவாக இருந்தாலும், இந்த அரசின் கொள்கையை நான் விளக்கிவிட்டேன்."

கரியமாணிக்கம் அம்பலம்:— "இத்தகைய குழுக்களே இல்லாமல், மார்க் அடிப்படையிலேயே மாணவர்களைத் தேர்ந்தெடுத்தால் என்ன?"

பதில்:—"பல ஆண்டுக் காலமாகவே 'மார்க்' அடிப்படையில்தான் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள்; என்றாலும், மாணவர்களின் மார்க்கை மட்டும் பார்க்காமல் அவர்களின் ஏழ்மை நிலை—குடும்பச் சூழ்நிலை—அவர்களுடைய பெற்றோர்களின் பிற்பட்ட நிலை—சாதாரணமாகச் சிலர் எவ்வளவு முயன்று படித்தாலும் அதிக மார்க் வாங்க முடியாத நிலை—ஆகியவற்றையெல்லாம் ஆராய்ந்து உரிய இடம் கொடுக்கவேண்டும் என்பதற்காகத்தான், உத்தியோகப் பற்றற்றவர்களையும், பொதுமக்களின் நிலையை நன்கறிந்த—நல்ல மனவளம் பெற்றவர்களையும் கொண்ட குழுக்களை நியமிக்கிறோம்."

அச்சமேன் எங்களுக்கு? அஞ்சும் நிலை எதற்கு?

"கதர், கிராமத் தொழில்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 'இந்தத் திட்டத்திற்கு இந்த அரசாங்கம் விரோதி அல்ல' என்று சுட்டிக்காட்டியவுடனே, திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள், 'என்ன; அடியோடு காரியத்தைக் கெடுத்துவிட்டீர்களே; காங்கிரசுக்காரர்களைக் கண்டு பயந்துவிட்டீர்களா?' என்று கேட்டார்கள்.

"காங்கிரசுக்காரர்களைக் கண்டு இந்த அரசு பயப்படவில்லை. நினைத்திருந்தால் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அன்றைக்கே ஓர் அறிக்கைவிட்டு, இந்தத் துறையை மூடிவிடுகின்ற காரியத்தைச் செய்திருப்போம். அப்படிச் செய்யாததற்குக் காரணம்—காங்கிரசுக்காரர்களைக் கண்டு பயப்படவில்லை என்றாலும்—இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான தொழிலாளர்களைக் கண்டு பயந்தாக வேண்டிய நிலை உள்ளத்தில் ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு இலட்சத்து ஒன்பதாயிரம் பேர் கதர்த் துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள்; இவர்களுக்கு என்ன மாற்றுத் திட்டத்தை வைத்திருக்கிறோம் என்பதைச் சிந்தித்தாக வேண்டிய நிலை இருக்கிறது.

"திருப்பூரில் உள்ள பிளீச்சிங் பாக்டரியை மூடவேண்டிய நிலை ஏற்பட்டவுடனே அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் அத்தனைபேரும் இங்கே வந்துவிட்டார்கள். உண்ணாநோன்பு நோட்டீசு எடுத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அதைப்பற்றி எங்களிடம் எடுத்துச் சொல்கிற நிலையைப் பார்க்கிறோம்.

"பத்துப் பேர்—இருபது பேர் வேலை பாதிக்கப்படுகின்றபோதே அதைச் சகித்துக்கொள்ள முடியவில்லை; இலட்சத்து ஒன்பதாயிரம் பேர்—இந்தத் துறையை மூடினோமானால் பாதிக்கப்படுவார்கள் என்கிறபோது, அவர்களுக்கு மாற்றுத் திட்டம் என்ன என்பதைச் சிந்தித்தாகவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது; ஆகவே, காங்கிரசுக்காரர்களைக் கண்டு நிச்சயம் இந்த அரசு பயப்படவில்லை; அதில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களைக் கண்டுதான் பயப்படுகிறோம்.

"செஞ்சிக் கோட்டையில் இருப்பவர்கள் அத்தனைபேரும் தேசிங்குராஜனாகிவிட முடியாது! அதுபோல், கதர் போட்டுக் கொள்கிறவர்கள் அத்தனைப் பேரும் காங்கிரசுக்காரர்களாகிவிடமாட்டார்கள்!

"மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த ஆயிரமாயிரம் பாட்டாளி மக்களும் அந்தத் துறையில் பணியாற்றிவருகிறார்கள். ஆகவே, படிப்படியாக அந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு மாற்றுத் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்கும்வரையில் இந்தத் துறையில் இந்த அரசு கவனம் செலுத்தியாக வேண்டும்.

உருப்படியான திட்டங்களை நல்ல முறையில் செயலாக்க வேண்டும்

"இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறைகளுக்கு இந்த மாநில அரசு கொடுக்கிற தொகை மிகக் குறைவு. கதர்த் திட்டத்திற்கு ரூ. 12 இலட்சமும், கிராமக் கைத்தொழில்களுக்கு ரூ. 15 இலட்சமும்தான் இந்த அரசு கொடுக்கிறது. ஆனால், மத்தியக் குழுவிடம் இருந்து கதருக்காக ரூ. 371 இலட்சம் கொடுக்கப்பட்டு வருகிறது; கிராமக் கைத்தொழில்களுக்காக 187 இலட்சம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, நமக்குக் கிடைக்கின்ற உதவித் தொகையைச் சீரான முறையில்—இதன் வளர்ச்சிக்காக முறையாக நாம் செலவழிக்க வேண்டும்.

"கதர்க்குழுத் தலைவர் திரு. தேபர், அண்மையில் முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்தபோது, 'தமிழகம்தான் இந்தத் துறையில் நல்ல முறையில் வேலை செய்கிறது' எனக் குறிப்பிட்டார். 'நல்ல பல திட்டங்களை ஏற்படுத்துங்கள்; இந்தத் துறைக்கு மேலும் எவ்வளவு நிதி வேண்டுமானாலும் ஒதுக்குகிறோம்' எனச் சொன்னார். ஆகவே, பனை நார் ஏற்றுமதித் திட்டம்—பனை வெல்லம் காய்ச்சுகிற திட்டம்—ஆகியவை போன்ற பல உருப்படியான திட்டங்களை நல்ல முறையில் செயலாக்க வேண்டும்.

கதர்ப் பிரச்சினையைக் கட்சிப் பிரச்சினையாக்கியதன் விளைவு!

"கதர் என்பதை, நமக்கு முன்னே இருந்தவர்கள் கட்சிப் பிரச்சினையாக வைத்திராமல் ஒரு தேசீயப் பிரச்சினையாக ஏற்படுத்தி இருந்திருக்க வேண்டும்; அதைச் செய்ய அவர்கள் தவறிவிட்டார்கள்! நாட்டு மக்கள் அத்தனை பேர்களும்—எல்லாக் கட்சிகளும் இதில் அக்கறை கொண்டிருக்கச் செய்யத் தவறிவிட்டார்கள்!

"முக்கியமாக அதற்கென்று ஒரு குழு இருக்கிறது; அதில் 14 பேர்கள் உறுப்பினர்கள்; 4 பேர் உத்தியோகத் துறையில் இருப்பவர்கள்; பாக்கி பத்துப் பேர்களைக் காங்கிரசுக் கட்சியிலிருந்தே போட்டு வந்திருக்கிறார்கள்! ஒன்றிரண்டு இடங்களில் மாற்றுக் கட்சியினரையும் போட்டிருப்பார்களேயானால், இன்றைக்கு அவர்களே இதன் சிறப்புக்களையெல்லாம் சொல்லிக்கொண்டு, அதற்காக வாதாட முன்வந்திருப்பார்கள்! மற்ற கட்சிக்காரர்களிடமே காட்டாது மறைத்து வைத்திருந்ததன் விளைவாகத்தான் பல கோளாறுகள்!

"இன்றைக்கு, அனைவருமாகச் சேர்ந்து அதை இலாபகரமாக்கிக் காட்ட வேண்டுமென்ற நிலை, அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும்."

---அமைச்சர் மா. முத்துசாமி

(சட்டமன்றத்தில் மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டது)

மாணவர்களை சேர்ப்பதில் புதிய அடிப்படை

கல்லூரி முதல்வர்கள் மாநாட்டில் ஆராயப்படும்

சட்டமன்றக் கேள்விகட்கு அமைச்சர் தந்தப் பதில்கள்

சென்னை, ஜூலை 14—

சென்ற கல்வியாண்டில் அரசினர் கல்லூரிகளிலும், தனியார் கல்லூரிகளிலுமாக மொத்தம் 50,000 இடங்கள் இருந்ததாகவும், 47,622 இடங்களிலேயே மாணவர்கள் சேர்ந்ததாகவும் இன்று சட்டமன்றத்தில், கல்வியமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள் கேள்வியொன்றுக்குப் பதிலளித்தார்.

பெரிய நகரங்களிலேயே இடநெருக்கடி நிலவுவதாகவும், நாட்டின் உட்பகுதிகளில் உள்ள கல்லூரிகளில் மாணவர்கள் சேர வருவது குறைவாகவே இருக்கிறது என்றும் அமைச்சர் மேலும் விளக்கமளித்தார்.

இவ்வாண்டு இன்னும் இடமிருந்து மாணவர்கள் வந்து சேராமல் காலியாக இருக்கும் இடங்கள் எத்தனை என்ற கணக்கைக் கேட்டிருப்பதாகவும், இத்திங்கள் 17-ஆம் நாளுக்குள் கணக்குக் கிடைத்துவிடும் என்றும், அதன் பிறகு, இடம் உள்ள கல்லூரிகட்கு இடம் கிடைக்காதிருக்கும் மாணவர்களை அனுப்ப ஏற்பாடு செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

கேள்வி;—"தனியார் கல்லூரிகளில் விரைவில் மாணவர்களைச் சேர்ப்பது முடிந்துவிடுகிறது; அரசினர் கல்லூரிகளில்தான் காலதாமதம் ஆகிறது என்று கூறப்படுவது உண்மையா? இதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?"

பதில்:—"அரசினர் கல்லூரிகளில் முதலில் 60 சதவிகித மார்க் வாங்கியவர்களை 25 சதவிகித இடங்களுக்கு கல்லூரி முதல்வர்களே சேர்த்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது; அதன்படி அந்த அளவுக்கு அவர்கள் முன்னாலேயே சேர்த்து முடித்துவிடலாம். மற்றவர்களைச் சேர்ப்பதற்குத்தான் குழு பரிசீலனை செய்கிறது. மேலும், பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் இடம் கிடைக்காமல் வந்து சேருபவர்களுக்கும் இடம் கொடுக்கவேண்டும் என்பதால் சற்று காலதாமதம் காட்டப்படுகிறது; எனினும், அடுத்த ஆண்டு காலத்தாழ்வு ஏற்படாமலிருக்க முயற்சி செய்யப்படும்.

அமைச்சர் மேலும் பல துணைக் கேள்விகட்குப் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

"கல்லூரிகளில் ஷிப்டு முறை ஏற்படுத்தப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஒப்புக்கொண்டிருக்கிறார்; ஆனால், அதற்கான ஆசிரியர்கள், இட வசதிகள் தேடவேண்டுமாகையால்—இவ்வாண்டு இயலாது என்பதால், சில கல்லூரிகளில் இடங்களைக் கூடுதலாக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

"85 மாணவர்களைக் கொண்ட அறிவியல் வகுப்பும் 90 மாணவர்களைக் கொண்ட கலையியல் வகுப்பும் புதிதாக ஏற்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருப்பதுடன், 'பாட்டனி' வகுப்பிலும் 28 பேர்களுக்குப் புதிதாக இட வசதியளிக்கப்பட்டுள்ளது.

"சில கல்லூரிகளில், 400 மார்க்கு வாங்கியிருந்தால்தான் சேர்த்துக்கொள்கிறார்கள் என்றும், இன்னும் சில கல்லூரிகளில் 350 மார்க்கு—300 மார்க்கு என்று இப்படிப் பல்வேறு அடிப்படையைக் கையாள்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது. இந்தக் குறைபாடுகளையும், குற்றச்சாட்டுக்களையும் ஆராய்ந்து தடுத்து நிறுத்தவும், எல்லாக் கல்லூரிகளுக்கும் மாணவர்களைச் சேர்ப்பதில் கையாளும் முறைகளை ஒருமுகப்படுத்தவும் முயற்சி மேற்கொள்ளப்படும். கல்லூரி முதல்வர்கள் மாநாட்டிலும் இதுபற்றிக் கலந்தாலோசிக்கப்படும்."

என். சி. சி. பயிற்சி

பி.யு.சி.-யில் இனி கிடையாது

திருச்சி, ஜூலை 14—

தமிழகக் கல்லூரிகளில் பி.யு.சி. மாணவர்களுக்கு இவ்வாண்டிலிருந்து என். சி. சி. பயிற்சி கிடையாது. இது தொடர்பாக ஏற்கனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

எனினும், எல்லாக் கல்லூரி மாணவர்களுக்கும் பட்டம் பெறுமுன் கட்டாயமாக இரண்டாண்டு என்.சி.சி. பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

சென்ற ஆண்டுவரை இப்பயிற்சிக் காலம், மூன்று ஆண்டுகளாக இருந்தது; இவ்வாண்டிலிருந்து இரண்டாண்டுகளாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

பட்டப் படிப்பு படிக்கும் எல்லா மாணவர்களும் முதலாண்டும், இரண்டாமாண்டும் கட்டாயமாக என். சி. சி.-யில் சேரவேண்டும்.

பி.யு.சி.-யில் ஏற்கனவே பயிற்சி பெற்றிருந்தால், பட்டப் படிப்பின்போது மேலும் ஓராண்டுப் பயிற்சி பெற்றால் போதும்.

தென் மாநில முதல்வர்கள் மாநாடு

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு குறித்து ஆய்வு

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்படவிருக்கும் இந்திய மரபினருக்கு மறுவாழ்வு அளிப்பதைப்பற்றி ஆய்வு செய்ய, தமிழக — ஆந்திர — மைசூர் — கேரள முதலமைச்சர்கள் மாநாடு ஒன்றை, ஆகஸ்டு 5-ம் நாளன்று மத்திய தொழிலாளர்—மறுவாழ்வுத்துறை அமைச்சர் ஜே. எல். ஹாதி கூட்டவிருக்கிறார்.

சிறுபிள்ளைப் பேச்சு

[தோழன்]

"இந்தியா என்பது வேங்கடத்தில் ஆரம்பமாகவில்லை என்பதையும், இமயத்தில் ஆரம்பமாகிறது என்பதையும் நான் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்."

கள்வர்கள்—காலிகள் - அராஜகவாதிகள்—குடிகேடர்கள் மட்டுமே குடிபுகுவதற்குரிய பாழ் மண்டபமாக ஆகிவிட்டதாகப் பலரும் சொல்லுகிற காங்கிரசுக் கட்சியைத், தூக்கி நிறுத்த முயற்சி செய்வதாகத் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் நாளேடு ஒன்றில், புதிதாக வேடம் போட்ட கதாநாயகர் ஒருவர், இவ்வாறு நினைவுபடுத்துகிறார்!

நாளொன்றில் சில நிமிடங்களே சொந்த நினைவில் வாழ்பவர்கள், ஒரு நாட்டின் எல்லை எது என்பதை நாளிதழில் நினைவுபடுத்தத் துணிந்ததற்காக நாம் நன்றி செலுத்துவதா—வெட்கப்படுவதா என்பதை, சமயம் வரும்போது விவாதித்துக் கொள்வோம்.

'இந்தியா' என்பது, இமயத்தில் ஆரம்பமாகிறதாம்! செத்து விழுந்த பிறகு சரியாக நடிக்கும் சில நடிகர்களைப்போல், எல்லோருக்கும் தெரிந்த இந்த நாட்டின் வடக்கெல்லை எது என்பதைச் சொன்னதிலாவது **'உண்மையே பேசவேண்டும் என்று அவர் உறுதி எடுத்துக் கொண்டு, அதைத் தெரிவித்தார்'** என்று நம்புவோம்.

தேசப் படங்களின் வரைமுறைப்படி, வடக்கெல்லைதான் மேலே இருக்கவேண்டும் என்று வைத்துக்கொண்டால், இமயத்திலிருந்துதான் இந்தியா 'ஆரம்ப'மாகிறது—உண்மை; ஆனல், இதே இந்தியா, 'குமரியில் ஆரம்பமாகி வடக்கில் முடிவதாக ஏன் வருங்கால நாட்களில் ஆகக் கூடாது' என்பதுதான், நாம் அவருக்கு நினைவூட்ட விரும்புவதெல்லாம்!

நான்கு எல்லைகளைக்கொண்ட ஒரு நாடு எங்கிருந்து ஆரம்பம்—எந்தப் பகுதிக்கு முதலிடம்—என்ற சச்சரவினல்தான், இந்த இருபதாண்டுக் காலத்தில் நாம் வாழ்ந்து கழித்த அலங்கோலத்தின் அடிப்படை இருக்கிறது.

இன்னமும், இந்தியா என்பது இமயப் பகுதியில்தான் 'ஆரம்ப'மாகிறது—என்ற அற்பத்தனமான வாதங்கள் தேவையில்லை!

இந்தியா நான்கு முனைகளில் எந்த எல்லையிலிருந்தும் ஆரம்பமாகலாம்; எந்த எல்லையிலும் முடியலாம்.

இந்த நாட்டின் வரலாற்றில், வாழ்வுக்கு — அரசியலுக்கு— அன்புக்கு—சகிப்புத் தன்மைக்குப் புகழாரம் போர்த்திய பொன்னன கருத்துகளெல்லாம், குமரி முனையில் தொடங்கியே இமயத்தில் எதிரொலித்தன என்பதை, 'நன்குகப் படித்தவர்கள்' அறிவார்கள்! தெற்கிலிருந்து என்றைக்கும் வாடைக் காற்று வீசியதில்லை!

ஆனல், சென்னை நகரத்துக் குடிசைப் பகுதிகளில்தான் தமிழகம் இருப்பதாக நினைத்துக்கொண்டிருப்போருக்கு, இந்தியாவின் ஆரம்பம் இமயத்திலிருந்து துவங்குவதாகச் சொல்லிக் கொள்வதில் இலாபம் இருக்கிறது; ஏனென்றுல், இமயமலையின் அடிவாரத்திற்குச் சற்று தள்ளி டெல்லிப் பட்டணம் இருப்பதைக் குறிப்பதற்குத்தான் அப்படிச் சொல்லிக் கொள்கிருர்கள்.

இன்னும் கொஞ்ச நாட்களில், 'டெல்லிப் பட்டணமும் அதன் அதிகாரிகளும்தான் இந்தியா' என்று வெகு சுலபமாகச் சொல்லிவிடுவதற்குப் பயிற்சி பெறுகிருர்கள்போலும்!

'டெல்லிப் பட்டணம்தான் முழு இந்தியா' என்று உறுதியாக நம்பிக்கொண்டிருப்பவர்களுக்கு, 'சென்னை நகரத்துக் குடிசைப் பகுதிகள்தாம் தமிழகம்' எனத் தடுமாறிக்கொண்டிருக்கவேண்டாம் என்பதையும் நினைவூட்டுவோம்!

காவிரி, கங்கை போன்ற பெரிய ஆறுகள் எங்கு ஆரம்மாகின்றன என்பதை யாரும் எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பதில்லை. அது பாய்ந்து ஓடும் பகுதிகளின் செழிப்பிலும் செம்மாப்பிலும்தான் அந்த ஆறுகளின் சிறப்பே அடங்கியிருக்கிறது.

அதேபோல், 'இந்தியா எங்கிருந்து ஆரம்பிக்கிறது என்பதல்ல—எந்தத் திசையில் நடைபோடுகிறது' என்பதுதான் இப்போது அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

எப்போதோ உறுதியாகி—யாராலும் மாற்றமுடியாதபடி நாம் அனைவரும் ஒருசேர அரணாக நின்று காப்பாற்றிக் கொண்டிருக்கும் இந்த நாட்டின் எல்லைகளை நமக்கு நினைவூட்டுவதாகச் சிறு பிள்ளைத்தனமாக யாரும் பேசிக்கொண்டிருக்க வேண்டாம்.

பெண்கள் உருது பள்ளிக்கு அடிக்கல் நாட்டு விழா

சென்னை-இராயப்பேட்டை பீட்டர்ஸ் சாலையிலுள்ள மாநகராட்சி பெண்கள் உருது பள்ளிக்கான துணைக் கட்டிடத்திற்கு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், 18—7—67 மாலை 5-மணிக்கு துணை மேயர் தா. கிருட்டினமூர்த்தி தலைமையிலும் — கே. பார்த்தசாரதி முன்னிலையிலும் அடிக்கல் நாட்டுவார்.

மகாபலிபுரம் கிளை நூலகப் புதிய கட்டிடத் திறப்புவிழா

மகாபலிபுரம் கிளை நூலகத்தின் புதிய கட்டிடத்தை 18—7—67 மாலை 5-மணிக்கு கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் திறந்து வைப்பார்.

கா. காளிமுத்து நிகழ்ச்சிகள்

ஜூலை 22: சமயநல்லூர்; 23: பழனி; 24, 28: அந்தியூர் வட்டம்; 29: நெய்வேலி; 30: சீர்காழி.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு வழுதி அச்சகத்தில் (24, சூரிய நாராயண செட்டித் தெரு, சென்னை-13) வெளியிடப்படுகிறது.

நடக்க இருப்பவை

18--7--67

சென்னை 59-வது வட்டம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு ஆல்தோட்டம் (புதுக் கல்லூரி எதிரில்); தலைவர்: டி. என். கிருட்டினன் எம்.சி., பேசுவோர்; அமைச்சர் கே. ஏ. மதியழகன், ஆலடி அருண எம்.எல்.ஏ., மைனர் மோசஸ், இளம்பரிதி, மு. அயாத் பாட்சா.

19--7--67

சென்னை 37-வது வட்டம்

டாக்டர் சத்தியவாணிமுத்து மன்றத் திறப்பு விழாவும் மலேசியா சென்று திரும்பிய என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கட்குப் பாராட்டும்; இரவு 7மணிக்கு தட்டாங்குளம் பழைய ஆட்டு தொட்டித் தெருவில்; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., அமைச்சர் சத்தியவாணிமுத்து, சி. பா. ஆதித்தனர் (சட்டமன்ற அவைத் தலைவர்), நீலநாராயணன், மு. மாசிலாமணி, கே. லா. சந்திரமோகன், மற்றும் பலர்.

தென்னகத்தின் சூயஸ் கால்வாய்!

செய்தி விளக்கம்

"தூத்துக்குடியை ஆழ்கடல் துறைமுகம் ஆக்கும் பிரச்சினையில் மத்திய அரசின் நிதித் துறையும்— போக்குவரத்துத் துறையும் கருத்து வேறுபாடு கொண்டு மோதிக்கொண்டன!"

நாளிதழ்கள் இப்படிச் செய்தி வெளியிட்டன.

தமிழகத்திற்கென்று செய்யப்படுகிற சதியோ என்னவோ— இங்கே அறிவிக்கப்படுகிற திட்டம் ஒவ்வொன்றுக்கும், ஏதோ ஒரு நிலையில்—யாரோ முட்டுக் கட்டை போடுகிருர்கள்!

சேலம் உருக்காலையை ஒத்திப் போட்ட **'புண்ணியத்'**தை, சஞ்சீவி ரெட்டியார் செய்தார்— தமிழகம் அவரை மறக்கவே மறக்காது!

இப்போது, தூத்துக்குடி ஆழ்கடல் திட்டம்—சேதுக் கால்வாய்த் திட்டம் பூர்வாங்க அளவில் நடந்துகொண்டிருக்கிற நிலையில், அதைத் தொடர்ந்து நடத்த முடியாதென்று தடைவிதிக்கிருர்—**'தங்கப்பெருமான்'** மொரார்ஜி தேசாய்!

"தகுதி அடிப்படையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டிய நிலையில் இது என்ன?" என்ருராம் மொரார்ஜி!

"5½ கோடி இதுவரை செலவிட்டிருந்தால் அதனல் என்ன? அதற்காக இன்னமும் 16 கோடி செலவிட வேண்டுமா என்ன?" —என்பது அவர் வாதம்!

இந்த 'மேதாவி'யின் வாதங்களை மத்திய போக்குவரத்துத் துறை அமைச்சு தவிடுபொடி ஆக்கி இருக்கிறது!

"உடனடியாக நிறைவேற்றப்படுவதற்கான நல்ல தகுதி உள்ள திட்டம்" என்று தெளிவாகச் சொல்லுகிறது போக்குவரத்துத் துறை!

நான்கு நாட்களுக்கு முன்னலே பேசுகிறபோதுகூட அ. இ. காங்கிரசுத் தலைவர் காமராசர், **"அதைத்தான் திட்டத்தில் சேர்ப்பதாகச் சொல்லிவிட்டார்களே—பிறகென்ன எழுச்சி நாள்?"** என்று கேட்டார்.

அறிஞர் அண்ணு அவர்கள், சட்டமன்றத்தில், நிதி ஒதுக்கீடு மசோதாவிற்குப் பதிலளித்து உரையாற்றுகையில் மிகத் தெளிவாகவே சொன்னுர்கள்—

"இந்த எழுச்சி நாள், தி. மு. க. மட்டும் கோஷத்திற்காக நடத்திடும் நாளல்ல; தமிழகத்தின் எல்லாக் கட்சிகளும்—ஒரு கட்சி நீங்கலாக— இந்த எழுச்சி நாளில் கலந்து கொள்ளுகின்றன. அந்த ஒரு காங்கிரசுக் கட்சிக்காரர்களும் கூட—உள்ளூர—'இந்தத் திட்டங்கள் வேண்டும்' என்றுதான் விரும்புகிருர்கள். சேலம் உருக்காலைக்காக அவர்கள் மெத்தப் பாடுபட்டார்கள்; அதிலும் குறிப்பாக, தொழிலமைச்சராக இருந்த திரு. வெங்கட்ராமன் அதற்காகப் போராடவே செய்தார்; 'அவர்கள் செய்யாவிட்டால் போகிறது; நாம் செய்யலாம்' என்று சேஷசாயியும், டி. வி. எஸ்.-சும், காசிராமனும்—தொழில் ஆரம்பிக்க மனுச் செய்வதுபோல்— சேலம் உருக்காலைக்காகத் தமிழக அரசின் சார்பில் இருபத்தைந்து ரூபாய் கட்டி மனுக் கூடப் போட்டார்; வருடம் ஒன்றரை ஆகிறது—இதுவரை பதில் இல்லை!

"அதனுல்தான், இப்படி விட்டுக்கொண்டிருப்பதில் பயனில்லை! இது, தமிழகத்தின் ஒரே குரல்—ஒருமித்த குரல்— என்பதைச் சுட்டிக்காட்ட, எழுச்சி நாள் தேவை!"

என்னும் பொருள்படப் பேசினுர்கள்.

"முட்ட முடிந்த நிலையில் கைவிடப்பட்ட 'சேலம்' போலவே தூத்துக்குடியும் ஆகியது" என்று நாம் நம்பினேம்.

★ ஏற்கனவே ரூ. 5½ கோடி செலவிடப்பட்டதால், 'இது, நிச்சயம் நடைபெறும்' என்று நம்பினேம்.

★ அண்ணு அவர்கள் சுட்டிக் காட்டியபடி, ஈழநாட்டின் கொழும்புத் துறைமுகம் வழியாக 600 மைல் சுற்றிக் கொண்டு வரும் வெளிநாட்டுக் கப்பல்களுக்கு தூத்துக்குடி—சேதுசமுக்திரக் கால்வாய் திட்டம் நிறைவேறினுல், 'தென்னகத்துச் சூயஸ் கால்வாய்' உருவாகி விடும்!

★ அது நடக்கப்போகிறதென்று நம்பி தமிழக அரசு பல தொழிலகளுக்கான திட்டங்களை வைத்திருக்கிறது.

★ இங்கே வந்துபோன மத்திய போக்குவரத்து அமைச்சர் வி. கே. ஆர். வி. ராவ், தூத்துக்குடித் திட்டத்தின் உடனடித் தேவையை புரிந்து கொண்டு, 'நிச்சயம் நிறைவேற்றிடவேண்டும்; ஆவன செய்கிறேன்' என்று சொல்லிச் சென்றுர்.

★ 'இந்தத் திட்டத்தை ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்ப்பதாக இருக்கிருர்கள்' என்று காமராசர் சொன்னுர்.

இத்தனைக்கும் பிறகு, மொரார்ஜி, 'சண்டித்தனம் பண்ணுகிருர்' என்று செய்தி வருகிறது!

மொரார்ஜிக்கு இது ஒரு விளையாட்டு! சீண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிருர்! ஆனல், 'தமிழகத்து ஒருமித்த உணர்ச்சியோடு விளையாடிக் கொண்டிருக்கிருர்' என்பது மட்டும் அவருக்கு நினைவிருந்தால் போதும்!

'இப்படி எல்லாம் நடக்கும்' என்று முன்கூட்டி அறிந்ததாலேதான், பேரறிஞர் அண்ணு அவர்கள், இந்த எழுச்சி நாளை நடத்திட முனைந்தார்கள்!

காங்கிரசுக்காரர்கள் இப்போது என்ன சொல்வார்களோ?

பிரச்சினையில் முடிவுகாண இன்று மத்திய அமைச்சரவை கூடுகிறது—என்ன முடிவெடுக்கிருர்களோ பார்ப்போம்!

—முத்து

உள்ளாட்சி மன்றங்களுக்குப்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள்—நகராட்சிமன்ற ஆணையாளர்கள் ஆகியவர்களை அழைத்து அவர்களுடைய மேலான கருத்துக்களைக் கேட்டறிந்து, அவர்கள் சொல்லுகிற கருத்துக்களிலே ஏற்புடையதாக இருப்பனவற்றை ஏற்று நடத்துவதற்கு இந்த அரசு நிச்சயமாக முயலும்.

அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட விளைவு

"ஊராட்சி ஒன்றியங்களும், நகராட்சிமன்றங்களும் அதிகமான அதிகாரத்தைக் கொண்டனவாக விளங்கவேண்டும்" என்ற கருத்தை இங்கே எடுத்துச் சொன்னுர்கள். அதிலே நமக்குக் கருத்து வேறுபாடு எதுவும் எழுவதற்கு நியாயம் இல்லை.

ஆனல், ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்; கடந்த காலத்தில் இந்த மன்றங்களுக்குப் பல அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு, நாளுக்குநாள் அவைகள் குறைக்கப்பட்டுவந்திருக்கக்கூடிய நிலையையும் நாம் அறிவோம்.

உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மிகச் சாதாரணமானதுதான் என்றுலும், அதற்குப் பின்னுலே தொக்கி இருக்கும் நிலை என்ன என்பதைக் கனம் உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் வேலை செய்துவருகின்ற ஆசிரியர்களை மாறுதல் செய்கிற பொறுப்பையும், ஆசிரியர்களை நியமிக்கும் பொறுப்பையும் ஊராட்சி ஒன்றியங்களின் பெருந் தலைவர்களும், ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்களும் ஏற்று நடத்திவந்தார்கள். அதற்குரிய உத்தரவுகளைப் பிறப்பித்தவர்களும் அன்றைக்கு இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்தவர்கள்தான்.

ஆனல், நாளடைவில் சரியான முறையில் சீர்படவில்லை—அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுவந்தன—என்ற நிலை ஏற்பட்டு, அவர்களாலேயே தாங்கிக்கொள்ளமுடியாத காரணத்தால், அங்கே ஆர்.டி.ஓ.-வைப் போட்டு, இந்த மாறுதல் நிலைமைகளை ஏற்படுத்தவேண்டும் என்ற நிலை வந்தது.

'இது ஒரு நல்ல ஏற்பாடு' என்று சொல்லுவதற்காக இதைக் குறிப்பிடவில்லை. அதிகாரங்கள் அங்கே ஓரளவு சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்பதை அவர்களே பார்த்துப் புழுங்கிப்போய்தான் அரசாங்கப் பொறுப்பிலுள்ள ஒருவரை நியமிக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எல்லா ஊராட்சி ஒன்றிப்புத் தலைவர்களும், ஊராட்சி—நகராட்சி மன்றத் தலைவர்களும் அப்படிப்பட்டவர்களாக இருக்கிருர்கள் என்பதைச் சுட்டிக்காட்டி நான் சொல்லவில்லை. ஒரு சில இடங்களில் அவர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய பதவியானது, 'பொதுமக்களுக்கு அருமையான முறையில் பணியாற்றக்கூடிய வாய்ப்புக் கிடைத்திருக்கிறது' என்ற எண்ணத்திலிருந்து அவர்கள் பின்வாங்கவில்லை.

ஒரு சில இடங்களில், தங்கள் சொந்த விருப்பு--வெறுப்பு உணர்ச்சிகளுக்குட்பட்டு— கட்சி மாச்சரியங்களுக்குட்பட்டு காரியமாற்றுகின்ற நிலையில்தான், நிர்வாக உத்தரவுகளின் மூலம் அவர்களுடை அதிகாரங்களைக் குறைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. இன்றைக்குப் பெரும்பான்மையான அதிகாரங்களை, அரசாங்கம் கையிலே வைத்துக் கொண்டு செயல்படும் தன்மை ஏற்பட்டிருக்கிறது.

(தொடரும்)

மணலி கந்தசாமி உடல்நிலை

சென்னை, ஜூலை 15—

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநிலக் குழுச் செயலாளர் தோழர் மணலி சி. கந்தசாமி, இன்று காலை திடீரென்று உடல்நிலை பாதிக்கப்பட்டார். டாக்டர் பி. கிருஷ்ணன் அவர் உடலைப் பரிசோதித்து இது மூளை ரத்தக் குழல் உறைவினுல் ஏற்பட்ட திடீர் பாரிச வாயு என்று கூறி அரசாங்க மருத்துவமனையில் அனுமதிக்கக் கோரினுர். அதன்படி தோழர் மணலி சி. கந்தசாமி ஜெனரல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கலை நிகழ்ச்சி

சென்னை 8-வது வட்டம் எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் 18—7—67 இரவு 7-மணிக்கு, இராயபுரம் அம்மன் கோயில் அருகில், ஆர். ஞானசேகரன் தலைமையில், சிவகங்கை சேதுராசனின் பலகுரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.